**இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையி - 2019**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகள், பொழிப்புடனான முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கமைய, எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர, சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் விதத்தில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களினது கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அதனோடு தொடர்புடைய தரப்பினரதும் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். சபையை கணக்கொழிப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது மாற்றீடு இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடை நிறுத்த நடவடிக்கை எடுத்தாலேயொழிய, தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் சபை தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். அதிகாரசபையின் சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை தொடர்பான பொறுப்பு குறிப்பிட்ட தரப்பினரதாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய அறிக்கையை வழங்குவது என்பது எனது நோக்கமாகும். நியாயமான சான்றுறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான சான்றுறுதிப்படுத்தலாக இருப்பினும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் போதியளவு தவறான கூற்றுக்களை வெளிப்படுத்துவதற்கான உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடும். இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோர் மேற்கொள்ளும் பொருளாதாரத் தீர்மானங்களுக்கு தாக்கம் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில் துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளை இனங்காணாமையால் ஏற்படும் தாக்கம் பிரபலமானதாகும். தவறான கூட்டிணைவு, போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டைப் புறக்கணித்தல் என்பன மோசடி ஏற்படக் காரணமாகலாம்.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டை அறிந்திருந்தபோதும், உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வத் தன்மைக்கான அபிப்பிராயத்தை வெளிப்படுத்துவதற்குக் கருதவில்லை.

- முகாமைத்துவம் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் உசிதமான தன்மையையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையையும் மதிப்பாய்வு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமை காரணமாக நிறுவனம் தொடர்ந்தியங்குவது தொடர்பாக போதியளவு நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது தொடர்பாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றினடிப்படையில் கணக்கீடு சம்பந்தமான நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பான அடிப்படையைப் பயன்படுத்தலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் எண்ணுவதாயின் நிதிக்கூற்றுக்களிலுள்ள அத்தகைய வெளிப்படுத்தல்களுடன் எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்த வேண்டும். அந்த வெளிப்படுத்தல் போதுமானதாக இல்லாதிருப்பின் எனது அபிப்பிராயம் மாற்றத்திற்குள்ளாக வேண்டும். எனது முடிவானது கணக்காய்வு அறிக்கைத் தினம் வரையான கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையிலானவை.

எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள், அல்லது நிலைமை காரணமாக தொடர்ந்தியங்கும் தன்மை முடிவுக்கு வரலாம்.

- வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் உசிதமானவாறும் நியாயமானவாறும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

இயலுமானவரை மற்றும் தேவையான எச் சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு பரப்பெல்லையும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்குமிடத்து, சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்யக்கூடியவாறு அதன் ஒழுங்கமைப்பு,முறைமை, நடைமுறைகள்,ஏடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமை, நடைமுறைகள்,ஏடுகள்,அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகப் பேணப்பட்டுள்ளனவா என்றும்,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டம் அல்லது சபையினது பணிப்பாளர் சபையால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாட்டிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா என்றும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்றும்,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனுடனும் ஆக்கபூர்வமாகவும் கால வரம்பிற்குள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா என்றும்,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமங்களுடன் தொடர்பான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இல் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக நியமத்தின் 92 ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி வரை முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்த எனினும் தற்பாது பயன்படுத்தப்படும் ரூபா 340,629,707 கிரயத்திலான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப் படாதிருந்ததுடன் அச்சொத்துக்கள் தொடர்பாக மதிப்பீட்டுத் தவறு இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் திருத்தம் செய்து மீண்டும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | எமது நிறுவனம் 2015 ஆம் ஆண்டிற்கு முன்னர் கொள்வனவு செய்த நிலையான சொத்துக்கள் தொடர்பாக போதியளவு தகவல்கள் இல்லாமையால் நிறுவகத்திற்குச் சொந்தமான அனைத்து சொத்துக்களையும் மீள் மதிப்பீடு செய்வதற்கு தயார்படுத்தப்பட்டுள்ளது. | பொது துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இல் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பான நியமத்தின் பிரகாரம் இந்துரான சரத்சந்திர ராஜகருண சர்வதேச நிலையத்திற்காக 2017 சனவரி 09 ஆந் திகதி நன்கொடையாக வழங்கப்பட்டிருந்த 0.28 ஹெக்டேயர் காணி மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அரசின் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு காணியை மதிப்பீடு செய்து தருமாறு கேட்டுக் கொள்ளப்பட்ட போதும் அவர்களால் இதுவரை மதிப்பீட்டு அறிக்கையொன்று வழங்கப்பட்டிருக்கவில்லை. | பொது துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

**1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | காலக் கழிவாகிய பிற்போடப்பட்ட மானிய வருமானம் (Amortized Differed Grant Income) ரூபா 3,221,352 குறைத்து நிதிச் செயலாற்றல் கூற்றில் வருமானமாக இனங்காணப்படாமையால் மீளாய்வாண்டின் செயற்பாட்டு வருமானம் அப்பெறுமதியால் குறைத்தும் பிற்போடப்பட்ட மானிய வருமானக் கணக்கின் மீதி அப்பெறுமானத்தினால் கூடுதலாகவும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | காலக் கழிவாகிய பிற்போடப்பட்ட மானிய வருமானம் கணக்கீடு செய்யும் போது இடம்பெற்ற தவறினை 2020 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் ஊடாக சீராக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | பொது கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க சீர்செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இரண்டு முறைஇன்வொய்ஸ் பத்திரங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதால் ஏற்பட்ட தவறு காரணமாக மீளாய்வாண்டின் செயற்பாட்டு வருமானம் மற்றும் வலு நிதியத்திற்காக பெறவேண்டிய தொகை ரூபா 1,005,550 வீதம் கூடுதலாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன. | பெற வேண்டிய கணக்குகளில் வலு நிதியத்திற்காக பெற வேண்டியதாக காண்பிக்கப்பட்ட மீதி 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் மீண்டும் குறிப்பிடப்பட்டு சீராக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உரிய வகையில் திட்டமிடப்பட்டு சரியான மீதி பேணப்பட வேண்டும். |
| (இ) | வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த ஆசிய அபிவிருத்தி வங்கிச் செயற்திட்டத்திற்குரிய உபகரணங்களுக்காக செலுத்தியிருந்த ரூபா | இது தொடர்பாக 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் திருத்தம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | தகவல் பரீட்சிக்கப்பட்டு சரியாக உரிய சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 2,299,935 ஆன வரி நடைபெறும் வேலையின் கீழ் நிதிக்கூற்றுக்களில் வருடக் கணக்காக காண்பிக்கப்பட்டிருந்த போதும், அதனை மீளாய்வாண்டில் தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | ஏனைய நடைமுறைச் சொத்துக்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள ஏனைய முற்பணக் கணக்கிற்கு தவறுதாலக ரூபா 301,918 தொகை செலவு வைக்கப்பட்டுள்ளமையால் அப்பெறுமதியால் முற்பணக் கணக்கு மீதி குறைத்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் ஊடாக திருத்தம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | சீராக்கி பேரேட்டு மீதிகள் சரியாக பேணப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமுலமான சான்றுகள் இன்மை

| விடயம் | தொகை (ரூபா) | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| பூநகரி மின்சார செயற்திட்டத்திற்குரிய மதியுரை சேவைகள் வழங்கலுக்காக கொழும்பு பல்கலைக் கழகத்திற்கு செலுத்திய கொடுப்பனவு | 9,192,859 | உறுதிச்சீட்டுக்கள் மற்றும் பயன்பாட்டு ஆவணங்கள் | கொடுப்பனவிற்காக பற்றுச்சீட்டை எமது அதிகாரசபையின் நிதிப் பிரிவிற்கு வழங்குமாறு கொழும்பு பல்கலைக் கழகத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. | தாமதமின்றி கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய தொகை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 ஆம் ஆண்டில் கல்வி வலய நிகழ்ச்சித் திட்டங்களுக்கென அறிவு முகாமைத்துவ செயற்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டிருந்த ரூபா | குறித்த கல்வி வலயங்களுக்கு கல்வி அமைச்சின் செயலாளருக்கு பிரதியுடன் அனுப்பிவைக்கப்பட்டு இம்முற்பணத்தொகையை | முற்பணம் வழங்கப்பட்ட வேலை முடிந்த உடனேயே குறித்த பிரிவால் மேற்பார்வை செய்யப்பட்டு பணத்தை தீர்வு செய்வதற்கு |

| | | |
|---|---|---|
| 3,246,466 ஆன முற்பணத் தொகை 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | விரைவில் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) பெற வேண்டிய முற்பணத்தின் கீழ் உள்ளடங்கிய ரூபா 1,094,015 தொகை 01 முதல் 04 ஆண்டுகளாக முன் கொண்டு வரப்பட்டவாறிருந்தது. அத்தொகையை அறவிடுவதற்கு அல்லது அதற்காக வேறு பொருத்தமான நடவடிக்கையொன்றை எடுப்பதற்கு அதிகாரசபை மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இத்தொகையை அறவிடுவதற்கு அல்லது புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு எடுக்க வேண்டிய நடைமுறைகளுக்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | வழங்கப்பட்ட முற்பணம் தொடர்பாக மீளாய்வு செய்து வேலை முடிந்த உடனேயே தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ஏனைய கொடுப்பனவுகள் மற்றும் கடன்கொடுத்தோராகக் கணக்குகளில் காட்டப்பட்ட ரூபா 2,953,225 தொகை 01 ஆண்டு முதல் 04 ஆண்டுகள் முதல் மீளச்செலுத்த வேண்டிய வைப்பாக காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 277,256 தொகை 05 ஆண்டு காலமாக இருந்து முன்கொண்டு வரப்பட்டு காணப்படுவதுடன் இத் தொகையை தீர்வுசெய்வதற்கு அதிகார சபை மீளாய்வாண்டு இறுதி வரையிலும் தவறியிருந்தது. | இத்தொகையை தீர்வு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | கடன் கொடுத்தோர் மற்றும் ஏனைய கொடுப்பனவு செய்ய வேண்டிய மீதிகளை மீளாய்வு செய்து கணக்கீட்டுக் காலத்தின் போது தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க நிலைபெறுதகு அதிகாரசபை சட்டத்தின் 46(3) ஆம் பிரிவு | நிலைபெறுதகு வலு அதிகார சபையின் தலைமை அலுவலகத்தை நிர்மாணிப்பதற்காக காணியொன்று 30 ஆண்டு கால குத்தகைக்கு பெற்றுக் கொள்வதற்கும் திட்டங்களைத் தயாரிப்பதற்காக 2015 முதல் 2019 ஆம் ஆண்டு வரை மொத்தம் ரூபா 48,678,878 தொகை மின்வலு நிதியத்தின் நோக்கங்களுக்கு முரணாக அந் நிதிய முதலீட்டிலிருந்து மீள பெறப்பட்டிருந்தது. | நிலைபெறுதகு வலு அதிகார சபையின் தலைமை அலுவலகம் "Energy Plus" எனும் தொனிப் பொருளின் கீழ் திட்டமிடப்பட்ட மின்சாரத்தைச் சிக்கனமாக கட்டிடத்தை நிர்மாணிக்கலாம் என்பதை காட்சிப்படுத்தும் கட்டிடமொன்றாகும். "இச் செலவினம் அனைத்தும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு மேற்கௌள்ளப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். | அதிகார சபையின் சட்டம் மற்றும் மின்சக்தி நிதிய நோக்கங்களுக்கும் இணங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை II ஆம் அத்தியாயத்தின் 13.7 ஆம் பந்தி | அதற்கு விதிவிலக்காக பதில் கடமையாற்றும் பதவிக்கு 2013 முதல் 2019 வரை பதில் கடமைப் படிகள், எரிபொருள் படிகள் மற்றும் போக்குவரத்துப் படியாக ரூபா 13,588,002 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த துடன் இத்தொகையை பொறுப்பான தரப்பினரிடமிருந்து மீண்டும் அறவிடுவது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | நியமன அதிகாரியாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக 22/09/2020 ஆந் திகதி பணிப்பாளர் சபைக்கு பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இச்சிக்கலைத் தீர்வு செய்வதற்காக பணிப்பாளர் சபையினால் பணிப்பாளர் சபை உப குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு தாபன விதிக் கோவைக்கும் சுற்றறிக்கை அறிவுறுத்தலுக்கும் அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப்பிரமாணங்கள் நிதிப்பிரமாணம் 454 | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பொருட் பதிவேடு பேணப்படவில்லை. | சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னர் புதிய கணனி மென்பொருளொன்றை பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பொருட் பதிவேடு பேணப்பட வேண்டும். |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப்பிரமாணக் கோவை நிதிப் பிரமாணம் 757(1) | மீளாய்வாண்டின் இறுதியில் சொத்துக்கள் பௌதீக ரீதியில் மெய்மையாய்வு செய்யப்பட்டு அந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வில்லை. | சொத்துக்களின் பௌதீக ரீதியில் மெய்மையாய்வு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் படி சொத்துக்கள் பௌதீக மெய்மையாய்வு செய்யப்பட்டு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (உ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப்பிரமாணக் கோவை நிதிப் பிரமாணம் 395(இ) | அதிகாரசபை மூலம் பேணிச் செல்லப்படும் 05 வங்கிக் கணக்குகளுக்குரிய மாதாந்த வங்கி இணக்க கூற்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | மாதாந்த வங்கி இணக்க கூற்று தயாரிக்கப்பட்டுள்ள துடன் இதனுடன் உங்களுக்கு அறிந்துகொள்வதற்காக சமர்ப்பிக்கின்றேன். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப்பிரமாணக் கோவை நிதிப் பிரமாணம் 396(ஈ) | செல்லுபடிக்காலம் மிகைத்த ரூபா 1,260,442 ஆன காசோலை தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இதற்காக கொள்வனவாளர்களுக்கு கடிதங்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | திறைசேரிச் சுற்றறிக்கை 1978 டிசம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க சுற்றறிக்கை | ரூபா 864,995,252 கூட்டுத் தொகையுடைய நிலையான சொத்துக்களின் பொருட்டு நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்கப் பட்டு பேணப்படவில்லை. | நிலையான சொத்துக்கள் மீளாய்வு செய்யப்பட்டதன் பின்னர் கணனி மென் பொருள் உருவாக்கப்பட்டு முறையாகவும் நாளது வரையாகவும் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கைப் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு முறையாகவும் நாளதுவரையாகப் பேணப்பட வேண்டும். |
| (ஏ) | பொது முயற்சிகள் சுற்றறிக்கை 2003 யூன் 02 ஆந் திகதிய 12 ஆம் இலக்க சுற்றறிக்கை | மேலதிக நேர செலவினம் தொடர்பாக விரிவான பதிவேடொன்று மாதாந்தம் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை 2011 திசம்பர் 12 ஆந் திகதிய 28/2011 ஆம் இலக்க சுற்றறிக்கை | இலங்கை பொறியியல் சேவையில் உள்ளடங்கலாக அதிகாரசபையின் பொறியியலாளர் பதவிகளில் உள்ள உத்தியோகத்தர் களுக்கு 2016 ஆகஸ்ட் தொடக்கம் 2019 டிசம்பர் 31 வரை தொழில்சார் படியாக ரூபா 14,861,000 தொகை அதிகாரசபையினால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | இதற்காக அமைச்சரவை அங்கீகாரத்திற்கு அனுப்பியதன் பின்னர் 2019.10.29 ஆந் திகதி அமைச்சரவை செயலாளரினால் தேசிய சம்பள பதவியணியினர் ஆணைக்குழுவின் பரிந்துரை கோரப்பட்டிருந்தது. | இலங்கை பொறியியல் சேவைக்குரிய படியொன்றாக இருப்பதால் கொடுப்பனவு செய்தல் சட்டரீதியற்றது. |

## 1.8 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ‘‘சுவீட் ஏசியா’’ நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பெறப்பட்டு எஞ்சியிருந்த ரூபா 4,548,176 தொகையானது 2011 தொடக்கம் மக்கள் வங்கி நடைமுறைக் கணக்கு ஒன்றிலும் மின்சக்தி நிதியத்திற்குரிய ரூபா 150,000,000 க்கு மேற்பட்ட தொகை அநேக ஆண்டுகளாக தேசிய சேமிப்பு வங்கி கணக்கொன்றிலும் எதுவித முதலீடொன்றிலும் ஈடுபடுத்தாமல் வைப்பிலிடப்பட்டிருந்தன. | ‘‘சுவீட் ஏசியா’’ நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான பணம் தொடர்பாக தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது | தொடர்புடைய அங்கீகாரத்தின் கீழ் செயற்திறனாக முதலீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.9 தகவல் தொழில்நுட்ப (IT) பொது நிர்வாக முறைமை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது அதிகாரசபையால் கணனி மயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைமையொன்று மூலம் கணக்கு வைத்தல் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதும் அதற்குரிய பொது நிர்வாகத்திலிருந்து (Genaral Controls) செயற்படுத்தவில்லையென அவதானிக்கப்பட்டது. | கணனி மயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைமை பயன்பாடு ஆரம்பித்தல் 2019 ஆம் ஆண்டின் போது இடம்பெற்றதால் கட்டுப்பாட்டு முறைமைகள் செயற்படுத்துதல் இவ்வண்டின் போது சிக்கலாக இருந்தது | பொது கட்டுப்பாட்டு முறைமையொன்று அறிமுகப்படுத்த வேண்டும் |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

மீளாய்வாண்டினது செயற்பாட்டு விளைவுகள் ரூபா 43,440,808 ஆன மிகையொன்றாக இருந்ததுடன இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 116,219,249 ஆகும். அதற்கமைய, நிதி விளைவுகளில் ரூபா 72,778,441 ஆன குறைவொன்று அவதானிக்கப்பட்டது. சூரிய சக்தி செயற்திட்டங்களை பதிவுசெய்வதால் கிடைத்த வருமானம் ரூபா 84,916,706 குறைவடைந்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை அணுசக்தி அதிகாரசபையானது இலங்கை மின்சார சபைக்கு 2012 ஆம் ஆண்டில் RCL (Regional Centre for Lighting) நிலையத்தின் முகாமைத்துவம் மற்றும் சொத்துக்களை கையளித்தல் முறையாக இடம்பெறாமை காரணமாக பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்ட மன்றத்திற்கு (BMICH) அதிகார சபையால் வழங்கப்பட்ட ரூபா 8,033,270 நிலுவை குத்தகை வாடகையை 2020 டிசம்பர் வரை இலங்கை மின்சார சபையிடமிருந்து அறவிடுவதற்கு அதிகாரசபை தவறியிருந்தது. | RCL (Regional Centre for Lighting) நிலையத்தின் நிலுவை வாடகையை இலங்கை நிலைபெறுதகு அதிகாரசபையின் செலவினமொன்றாக இனங் காண்பதற்கு அனுமதியை கோரி கடிதமொன்று அமைச்சிற்கும் திறைசேரிக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | தேசிய பாதீட்டு திணைக்களத்தின் கருத்துக்களை கோரி பொருத்தமான நவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) ‘‘சுவீட் ஏசியா’’ நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஐரோப்பா சங்கத்திடமிருந்து பெறப்பட்ட ரூபா 7,334,354 தொகையில் ரூபா 3,135,202 பொது முயற்சிகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் அதிகாரசபையின் சகல உத்தியோகத்தர்களுக்கும் தொழில்சார் படியாக வழங்கப்பட்டிருந்தது. | ‘‘சுவீட் ஏசியா’’ நிகழ்ச்சித் திட்டத்திற்காக நிதிஏற்பாடு தொடர்பாக தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அதனை அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சட்டரீதியற்ற கொடுப்பனவு ஒன்று இல்லாமையால் இதனை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நிலைபெறுதகு சக்தி அதிகார சபையின் ஆரம்பம் முதலாக ஊழியர் சம்பள மாற்றக் கணிப்பில் ஏற்பட்ட வழுக்கள் தொடர்பாக மேற் கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கையின் பிரகாரம் 2007 முதல் 2011 வரை கூடுதலாக வழங்கப்பட்ட ரூபா 2,171,760 ஆன சம்பளம் மற்றும் படிகளை குறித்த உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடுவதற்கு அல்லது திருத்தம் செய்வதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இணைத்துக் கொள்வதற்கான செயற்பாட்டை தயாரிப்பதற்காக பணிப்பாளர் சபை நியமித்த குழுவிற்கு ஒரு செயற்பாடாக மேற்படி தவறு தொடர்பாக கவனம் செலுத்தி அந்த அறிக்கைக்கு உள்ளடக்குமாறு அறிவிக்கப்பட்டதுடன் அவ்வாறு தயாரிக்கப்பட்ட அறிக்கைக்காக 2020.09.22 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. | பணிப்பாளர் சபை நியமித்த குழுவின் அறிக்கையை நடைமுறைப் படுத்துவதற்குத் தேவையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளல் |
| (ஈ) | 2007 செப்டம்பர் 28 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் 18 மாத காலத்தினுள் புரொடோடைப் வாகனங்கள் மூன்றை அபிவிருத்தி செய்வதற்கு 2007 ஆம் ஆண்டில் வெளிநபர் ஒருவருக்கு ரூபா 7,956,800 வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2019 திசெம்பர் 31 வரை 12 ஆண்டுகள் கழிந்திருந்த போதும் அதனை பூர்த்தி செய்தல் தொடர்பாக முறையான நடவடிக்கை ஒன்றை எடுப்பதற்கு அல்லது நட்டத்தை மீளப்பெறுவதற்கு அதிகார சபை தவறியிருந்தது. | பக்கச்சார்பற்ற நடுவர் ஒருவரால் நடாத்தப்பட்ட கலந்துரையாடலின் பிரகாரம் மூன்று மாதிரி வடிவத்தில் காட்சிக்கு வைக்கக்கூடிய வாகனம் ஒன்றைத் தயாரித்து வழங்க அத்தரப்பினர் இணங்கி உள்ளதுடன் இது பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சட்டபூர்வமாக உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கொரியா சக்தி முகவர் நிறுவனத் (KEA) மற்றும் அதிகாரசபையினால் செயற்படுத்தப்பட்ட பரீட்சாத்த செயற்திட்டமொன்றின் கீழ் மானியமொன்றாக அதிகாரசபைக்கு கிடைத்த சூரிய சக்தியில் இயங்கும் 04 | 2020 ஆம் ஆண்டில் எதிர்பார்த்த செயன் முன்னேற்றமொன்றை அடைந்து கொள்ளக்கூடிய நிலைமையில் காணப்படவில்லை. பொறியியலாளர்களுக்கு பயிற்சியும் வழங்கி | பரீட்சார்த்த செயற்திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக உடன்படிக்கை செயற்படுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| முச்சக்கர வண்டிகளை செயற்படுத்தும் முகவர் நிறுவனமாக BMICH இற்கு 2019 திசெம்பர் 13 ஆந் திகதி கையளிக்கப்பட்டிருந்த போதும் பரீட்சாத்த செயற்திட்டத் திற்குரிய தரவுகளை சேகரிப்பதற்காக உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. அவ்வாறே செயற்திட்டம் எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்று வதற்கு செயற்திறனாக பயன்படுத்தவில்லையெனவும் அவதானிக்கப்பட்டது. | தேவையான வழிகாட்டல் வழங்கப்பட்டுள்ளன. | |

## 3.3 நிதி குறைவாகப் பயன்படுத்துதல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் அதிகாரசபையின் 04 பிரதான செயற்திட்டங் களினதும் பாதீடு செய்யப்பட்ட செலவினம் ரூபா 207,400,000 தொகை மற்றும் உள்ளவாறான ரூபா 131,129,145 ஆக இருந்தமையால் இடையே மொத்த நிதியேற்பாடாகிய ரூபா 76,270,855 தொகை அதாவது 37 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது. | 2019 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதத்தில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் காரணமாக உயிர்பல்வகை செயற்திட்டத்திற்காக பணம் செலவழிக்கப்பட வேண்டிய நடைமுறை (இலங்கையின் நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் அல்லது UNDP நிறுவனத்தின் முறைமையின் பிரகாரம்) சிக்கலான நிலைமையொன்று உருவாகிய காரணத்தினால் எதிர்பார்த்த நோக்கத்தை அடைந்துகொள்ள முடியாமல் இருந்தது. | பாதீடு அவ்வவ்போது மீளாய்வு செய்யப்பட வேண்டியதுடன் செலவினம் காலதாமதமின்றி நிதிப்பிரிவிற்கு தாமதமின்றி பெறுவதற்கான முறையான விதிமுறைகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) இந்துரான சர்வதேச மேம்பாட்டு நிலையச் செயற்திட்டத்திற்கு 2019 ஆம் ஆண்டில் ரூபா 17,000,000 நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் 55 சதவீதமான ரூபா 9,405,534 தொகை செயற்திட்டத்திற்குச் உரிய காலப்பகுதியில் பயன்படுத்தப்பட்டதாக அவதானிக்கப்பட்டது. | இப்பணத்தை ஒதுக்கீடு செய்த போதும் குறித்த ஆண்டில் அப்பணத்தை செலவு செய்வதற்கு முடியாமல் இருந்த போதும் இச்செயற்திட்டம் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | வருடாந்த மதிப்பீடு தொகையை குறித்த செயற்திட்ட காலப்பகுதியில் தாமதமின்றி பயன்படுத்த வேண்டும். |

## 3.4 செயற்திட்ட அல்லது மூலதன வேலைகளின் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நகர அபிவிருத்தி அதிகார சபைக்கும் இந்த அதிகார சபைக்கும் இடையேயான 2015 யூன் 22 ஆந் திகதிய 631 ஆம் இலக்க வரி உடன்படிக்கையின் பிரகாரம் 30 ஆண்டுகள் குத்தகைக்கு அதிகாரசபைக்கு ரூபா 45,856,451 இற்கு பெற்றுக் கொண்ட 75 பேர்ச் காணியில் 2019 ஆம் ஆண்டின் இறுதி வரை ரூபா 23,290,653 ஆன செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டு திட்டங்கள் தயாரித்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் நிர்மாண நடவடிக்கைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அரச கொள்கையின் பிரகாரம் நிர்மாணத்தை ஆரம்பிப்பதற்கு சிக்கலான நிலைமையொன்று உருவாகியுள்ளது. | நிர்மாணத்தை ஆரம்பிப்பதற்கு அதிகளவில் தாமதம் ஏற்பட்டதால் மாற்று நிதிய வழங்கல் வழிகள் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் அங்கீகரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், 2019 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் 06 மாதங்கள் தாமதத்தின் பின்னர் 2020 செப்தம்பர் 08 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | ஊழியர் பற்றாக்குறை, கணக்கேடுகளில் பதிவு செய்யும் வரையில் கணனி மயப்படுத்தப்பட்ட கணக்கு முறைமை இரண்டையும் பேணிச்செல்வதற்கு நேர்ந்தமை மற்றும் நாட்டில் ஏற்பட்ட COVID 19 நிலைமை காரணமாக நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதில் தாமதம் ஏற்பட்டது. | காணப்படும் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் உரிய திகதிகளில் நிதிக்கூற்றுக்களை தயாரித்து சமர்ப்பிப்பது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். |

**4.2 கூட்டிணைந்த திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிறுவனத்தின் நடவடிக்கைகளை குறுங்கால மற்றும் நீண்டகால தொலை நோக்குடன் குறைந்தது மூன்று ஆண்டு காலப்பகுதிக்காக கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் உத்தேச இலக்கை அடைந்து கொள்வதற்கு முடியுமான வகையில் நிறுவனத்தை வழி நடாத்துவதற்குப் பணிப்பாளர் சபை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 05 ஆண்டு காலப்பகுதிக்காக கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் காலப்பகுதியில் நாட்டில் நிலைபெறுதகு சக்தி அபிவிருத்திக்காக தேவையான முதலீடொன்று தொடர்பாக ஆழ்ந்த கவனத்த செலுத்துமாறு பணிப்பாளர் சபை மூலம் சுட்டிக் காட்டப்பட்டதுடன் அதன் பிரகாரம் மதியுரை சேவைகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கைப் பிரகாரம் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

**4.3 வருடாந்தம் செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அதிகார சபையால் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தின் செயன் முன்னேற்றம் மீளாய்வு செய்யப்பட்டு மீளாய்வாண்டின் இறுதியில் அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டிற்காக செயலாற்றல் அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் செயன் முன்னேற்றம் மீளாய்வு செய்யப்பட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும். |